களின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று வற்புறுத்த விரும்பினால் இப்போது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிறிது நேரத்திற்குப் பின்பு) வெட்டுத் தீர்மானங்களெல்லாம் வற்புறுத்தப்படவில்லை. எனவே, வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் VII—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் 21,27,400 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்" என்பது.

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : VIII என்ற எண் உள்ள, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற நிதிக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்த உறுப்பினர்கள், அந்தத் தீர்மானங்களின் மீது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்களா ?

THIRU. K. VINAYAKAM : Sir, in view of the assurance given by the Hon. Chief Minister that they will draw salaries regularly, month by month, I am withdrawing my cut motion.

THE HON. THIRU. C. N. ANNADURAI : At reduced rates.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா வெட்டுத் தீர்மானங்களும் வற்புறுத்தப்படவில்லை. ஆகவே, அவையெல்லாம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றன.

இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் VIII—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் 3,34,81,300 ரூபாய்க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்".

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரியத் தொகை வழங்கப்பட்டது.

6. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முன்னால், அறிவிப்பு ஒன்று உள்ளது.

5 என்ற எண் உள்ள மதுவிலக்கு (திருத்த) மசோதாவும்,

6 என்ற எண் உள்ள பொது விற்பனை வரி (திருத்த) மசோதாவும்,

7 என்ற எண் உள்ள மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) மசோதாவும்,

மேலவையின் பரிவுரை எதுமின்றி 29—6—1967 அன்று மேலவையில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக மேலவையின் மாண்புமிகு சேர்மன் அவர்களிடமிருந்து செய்தி வந்துள்ளது என்பதை அறிவிக்கின்றேன்.

இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை நாளை, 1—7—1967 காலை 9-00 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம.

பி.ப.
2-35 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.